INDIA—A POLICY & A PROSPECT.

இந்தியா—அதன் அரசியலும் வருங் காலநிலையும்.

BY

Sir Henry Cotton K.C.I.E.,

IN "THE REVIEW OF REVIEWS"

[illegible] என்ற
[illegible] வெளியாகிற [illegible]
[illegible] சொல்வது"
[illegible]
[illegible]

ஸர் ஹென்ரி காட்டன் K. C. I. E.,

[illegible]

MADRAS.

THE SWADESAMITRAN PRESS.

1905.

(Copy Right Registered.)

விலை அணா 1-6



முகவுரை.

இந்தியாவிலும் இங்கிலண்டிலும் ராஜதந்திரிகளும், அரசியல் வல்லோரும், மற்றக் கல்விமான்களும் அடிக்கடி பல முக்கியமான விஷயங்களைப்பற்றி அங்கிலத்தில் அருமையான பிரசங்கங்கள் செய்கிறார்கள். அப்போதப்போது சுதேசமித்திரனில் நாம் அவைகளின் கருத்தைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதி வந்தும், அவைகளை முற்றிலும் ஆதியோடந்தமாய் மொழிபெயர்த்துப் பிரசுரித்தல் சாத்தியமாவதில்லை. முதலாவது, அப்படி மொழிபெயர்த்தல் சிரம சாத்தியமாகையால் காலதாமதமாகும். இரண்டாவது, பத்திரிகையில் இடங் கிடைக்காது. பத்திரிகையை நடத்துவோர் நீண்ட ஆங்கில பிரசங்கங்களை மொழிபெயர்ப்பதில் சிரமத்தையுங் காலத்தையும் செலவிட்டால், மற்ற விஷயங்களைக் கவனித்தல் இயலாமற் போகும். அப்படியே பத்திரிகையில் மூன்று நாலு பத்திகளும் அவைகட் கொடுக்கப்படுமாயின் பிற விஷய மடங்கின வாகி விட்டால், மற்ற விஷயங்களைப் பிரசுரிக்க இடமில்லாமற் போகும். ஆதலால் மேற்கண்டவாறு பெரியோர் அப்போதப்போது செய்யும் பிரசங்கங்களையும் வியாசங்களையும் சேகரித்துத் தமிழ் மொழிபெயர்ப்பில் வரையில் சாவகாசமாகப் படிக்க ஏதுவாயிருக்கக்கூடும். அப்படிச் சேகரித்துப் படிப்பதும் மிக்க விருப்பத்தக்க தென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் அவைகளை நமது ஆபீசில் மொழி கிடைத்தபோது மொழிபெயர்த்துப் பிரசுரம் செய்யலாமென்று உத்தேசித்துக்கொண்டு, ஸர் ஹென்றி காட்டன் செய்த இந்த அரசியல் பிரசங்கத்தை முக்கியப் வாக்கியமாக



இந்தியா அரசியலும் வருங்கால நிலையும்

சர்வத்தில் பார்லிமெண்டு டதிகாரதோர்போது அதில் இந்தியாவைப்பற்றிய விஷயங்கள் தலைப்பட்டிருக்குமென்று நாம் நிச்சயமாக நம்பலாம். லார்ட் கர்ஸனது அரசுமுறை மற்ற விஷயங்களில் எப்படி இருந்தபோதிலும் இந்தியர்களின் பிரயத்தினத்திற்கு ஓர் தூண்டுகோல்போலிருக்கின்றது. அப்பிரயத்தினத்தின் அறிகுறிகள் பல இத்தேசத்தில் காட்டியிருக்கின்றன. லிபரல் கட்சியைச்சேர்ந்த இந்தியா செகரிடேரி யொருவரும் வைசிராய் ஒருவரும் நியமிக்கப்படுங்காலத்தை இந்திய ஜனங்கள் ஆவலுடன் நாடிவருகிறார்கள். (இராஜ்யாபிவிருத்தி) அதோமுகமாய்ச் சென்றிருந்த வருஷங்களாய (அரசாட்சியாரால்) செய்யப்பட்ட பிழைகள் இப்புது அதிகாரிகளின் காலத்தில் நீக்கப்படுவது மட்டுமன்றி புது ஸ்தாபன விஷயத்திலும் தக்கவிருத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கிறார்கள். மிகவும் எதிர்பார்க்கைக்குரிய காலம் அவர்களின் முன்னே காணப்படுகின்றது. நெடுநாளாக அவர்கள் இதுவரை திவலைகூடக் காண முடியாதிருந்தார்கள். இப்போது அங்கு ஓர் பெரிய எழுச்சி தோன்றியிருக்கிறது. பெரிய மாறுதல்கள் தோன்றிவருகின்றன. அதிருப்தியின் குறிப்பும் பொதுவாகிவிட்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை, அலஹாபாத், லாஹூர் என்ற நகரங்களில் கோபத்துடன் கூடிய கண்டனசபைகளின் அபூர்வக் காட்சியை நாம் பார்த்தோம். லார்ட் கர்ஸன் சிறந்த வன்மையும் அற்புதமான ஊக்கமுமுடைய

வர். மிக்க அனுதாபங் காட்டுவதற்கு மாறுபட்ட இயற்கை யுடையவரில்லை. அவர் பட்டும் இந்திய ஜனங்களின் ஆசை களிலும் நம்பிக்கைகளிலும் அனுதாபங் காட்டியிருப்பாரா னல் இந்தியாவின் சரித்திரத்தில் என்றும் ஞாபகமிருக்கக் கூடியதாக [illegible] நிலைநாட்டியிருக்கலாம். ஆனல் அவர் இவ்விஷயத்தில் தவறிவிட்டார். அவர் விஷயங்களை ஒருவிதமாகப் பார்க்கிறார். ஜனங்கள் மற்றொருவிதமாகப் பார்க்கிறார்கள். லார்ட் கர்ஸன் இப்போது இருப்பது போல அதுவரை ஒரு வைசிராயும் ஜனவெறுப்புக்காளா யிருந்ததில்லை. (கரகோஷம்) அதோடு முடிவான முறையில் அனுசரிப்பதினல் எப்போதும் ஜன மன தைக் [illegible] பதத்தைப் பெறு கின்றன. [illegible] சக்தியிலும் ஜாகிரதையிலும் [illegible] மாறுபாடில்லை [illegible] கால முறை [illegible] ஞாபகச் சின்னமாகும். [illegible] ஏற்பட்டிருக்கின்றன. [illegible] இவைகளால் [illegible] கவர்ன்மெண்டோ அனு தாபம் [illegible] இன்னும் போலவே, [illegible] இருக்கிறது. ஆனல் [illegible] வெறுப்பு [illegible] முறையின் [illegible] பாஷைகளைத்தான் [illegible] வேண்டுமென்பதும், டாக் டர் [illegible] முறையாகப் பெண் [illegible] செய்து வரப் [illegible] வேண்டுமென்பதும், [illegible] முதலை வைத்து வர்த் தகம் முதலியன நடத்திப் [illegible] ஜனங்களுக்கு லாபம் பெருக்கிக்கொண்டு போக வேண்டுமென்பதுமாகும்.

இந்தியாவின் [illegible] வேண்டுமென் பதைக் கவர்ன்மெண்டார் அறியவேமாட்டார்கள். (இதன்

பேரில் ஜனங்களின்) தேசாபிமானம் பற்றிய விரோதம் முண்டாவதின் அபேதார் வியப்பாகும். ராஜாங்க விஷயமாய் சுதந்தர ஸ்தானங்களிருக்கின்றனவே யென்று [illegible]ணாக்கிதான் கல்வி கற்ற வகுப்பினருக்கு அதிருப்தி யுண்டாயிருத்தற்கு முக்கிய காரணம். இத்துடன் அந்நிய முதல் போட்டு அந்நியத் தலைவர்கள் வர்த்தகம் முதலியன நடத்துவதனால் தேசத்திற்குப் பொருள் நஷ்டமுண்டாகிறதேயென்று எண்ணி சோர்ந்திருக்கின்றது. அவர்கள் தேசத்தின் உயர்ந்த உத்தியோக பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருப்பதே அவர்கள் உத்தியோகஸ்தரிடம் விரோதமுற்றிருப்பதன் காரணமாகும். உயர்ந்த தொழில்களிலும் வர்த்தகங்களிலும் அத்தேசத்தார் பாகம் பெற்றிருப்பதே அவர்கள் வர்த்தகரிடம் விரோத முணர்ச்சி காட்டுவதின் காரணமாகும். அடங்கிக்கொண்டிருக்கும் தணல் [illegible] எழும்பிக்கொண்டிருக்கின்றன. [illegible]யையும் பிரிப்பதாகிய (அன்பின்மை யென்னும்) கடல் அகன்றுகொண்டே வருகின்றது. ஐரிஷ் துவேஷம் அங்கிலேயரால் காட்டப்படுவது போலவே இந்தியாவிலும் காட்டப்படுகின்றது.

அரசியல்.

சில காலத்திற்கு முன் லார்ட் கர்ஸன், "இந்திய அரசு [illegible]லிருந்து பிரிடிஷ் தேசம் தனது கையை யெடுத்துக்கொள்வது சாத்தியமாகவேனும் அல்லது உசிதமாகவேனும் இருக்குமென்றாவது எத்தனையோ காலத்திற்கப்பாலுங்கூட வருமென்று எனக்குத் தோன்றவில்லை" என்றார். இதுவே [illegible] கருத்து. அங்கிலேயரிற் பெரும்பாலோர் [illegible]கொண்டிருக்கும் அபிப்பிராயமும் இதுவேயென நானறிவேன். ஆனால் இந்தியாவின் எதிர்கால நிலைமையைப்பற்றி எனது அபிப்பிராயம் அவ்வாறன்று. இப்போதிருக்கிற விதமாகவே பிரிடிஷார் இந்தியாவை எப்போதும் வைத்துக்கொண்டிருத்தல் சாத்தியமில்லை. ஓர் பெ

ரு தேசத்தின் எல்லா இலாகாக்களையும் அத்தேசத்திற்குப் புதிதாக வந்த சில அந்நியர்கள் மதம், கொள்கைகள், நடையுடை பாவனைகள் முதலியவற்றின் வேற்றுமையாற் பிரிவு பட்டவர்களாய் ஜனங்களிடம் நெருங்கிய சம்பந்தமேதுமில்லாமல் ஆட்சி புரிதல் என்றும் நிலைத்திருக்கக் கூடிய காரியமில்லை. அதற்கு வேறுவிதமான [illegible] யொன்றுமில்லையென்றதைத் தூக் கொண்டாலும், சகல விருத்தி அதனால் அசாத்தியமாக்கி விடும். அந்நியர்களின் முறைகள் தாபிக்கப்பட்டு ஜனங்களையடுத்துவர் அந்நிய [illegible] ப்பட்ட அன்று முதலே இந்தியாவிற்குச் சுயாதீனம் வந்து தீரவேண்டுமென்பது தெரிந்த விஷயம். சர்ப்பந்த யற்ற பத்திரிகைகளின் சக்தியைக் [illegible], இப்படித்தான் துரைத் தனம் நடக்கவேண்டுமென்ற [illegible] டும், [illegible], அதிமுதலியவற்றின் பெருக்கமும், ஐரோப்புடன் எளிதான போக்குவரவும், பேச்சுரிமைச் சுதந்திரங்களும் விசாலமான கொள்கைகளும் அந்நியமாக வந்து சேர்தலும், அவற்றிற்குரிய பயனை விளைத்துவிட்டன. பொதுஜன அபிப்பிராயத்தின் சக்தி [illegible] அதிகரிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவுக்கு [illegible] முறைகளை [illegible] டி, வெவ்வேறு ஜாதியார்களை [illegible] ஒன்றாய்த் தூண்டி விட்டு, [illegible] முதலியன [illegible] ஜன ஐக்கிய உணர்ச்சியுண்டாக்கியிருக்கிறது. [illegible] ஜனங்கள் [illegible] முடிய பெறவேண்டுமென் றன், [illegible] தாமே [illegible] திருக்கும் [illegible] என்னென்ன [illegible] இன்றியமையாதனவென்பதை அறிந்து செயல்பட வேண்டும். [illegible] விருத்தி [illegible] பாதையில் [illegible] அதன் [illegible] கண்டுபிடிக்க வேண்டும். ஆனால், [illegible] வளர்ச்சி [illegible] அஜாக்கிரதையாக [illegible] அதனை அடக்கிவிட முயன்றாலது அதை [illegible] த்தாருக்குப் பெரிய அபாயமாக்கிக்கொள்ள [illegible]

அடிமைத்தன்மை கொண்ட அறிவற்ற ஜனங்களை நடத்துவதுபோல் நாம் பழைய முறைகளைக்கொண்டே இன்னும் அரசியல் நடத்தி வருவோமானால் அது வீணாகும். வீண்மாத்திரமன்று. நமக்குப் பேரபாயம் விளைக்கக்கூடிய முழுப்பேதைமையாகும். இந்தியா, ஆஷியாவில் மறுபடியும் 'ஒரு பெருஞ் சக்தியாக ஏற்பட்டுவருகின்றது. அந்நாடு சுயாதீனத்திற்கு வரும் பாதையை எளிதாக்குவதே ஆள்வோரின் கடமையாகும். வெறும்பேச்சுப் பயனில்லை. இந்தியக் கவர்ன்மெண்டார் ஊக்கத்துடனும், தைரியத்துடனும் தமது ஆட்சிக்குப் பதிலாக சுதேச ஆட்சி மறுபடி அமைதியாக உண்டாகும்படி முயல்வதே முக்கிய நோக்கமாகக்கொள்ளவேண்டும்.

இந்தியாவிலிருந்து நாம் திடீரென்று விலகிவிட வேண்டுமென்று எவரும் சொல்லமாட்டார்கள். அச்செய்கையானது ஓர் குழந்தையைத் திருடிக்கொண்டுவந்த மனிதர்கள் பச்சாதாபங்கொண்டு புலிக்காட்டில் விட்டுப் போவதற் கொப்பாகும். (இந்தியருக்குள்ளே சுய ஆட்சி முறையை) மறுஸ்தாபனஞ் செய்யவேண்டும். அது மெள்ள மெள்ளவே நடக்கக்கூடும். அம்முறையின் முதிர்ச்சி காண்பதற்கு இன்னும் பல வருஷங்கள் கழியவேண்டும். ஆனால், நமது கண் முன்னால் எப்போதும் அம்முறையே நடைபெற் றேறுதல் அவசியம். சீக்கிரமில்லாவிடில், சிலகாலம் கழித்தாவது கீழ்த்திசைத் தேசங்களுக்குள்ளே இந்தியா மறுபடியும் தனக்குரிய கௌரவ ஸ்தானத்தை வகித்தல் அவசியமாகும். அந்தப் பெருந்தேசமானது சாதாரணத் தொழில் வகைகளிலும் சங்கீதம், கவிதை, சிற்பம் முதலிய அருந்தொழில்களிலும் கொந்தசடை ஒன்றும் விருத்திசெய்யாமலும், சுயநலங்களொன்றையும் அறியாமலும், நாகரீக விருத்திக்குத் தகுதியில்லாமலும் இருக்கும் அநாகரிக தேசமன்று. அத்தேசத்தார் தங்கள் பூர்வீக நிலையைப்பற்றி யாலோசிக்கும்போது கிரமமாகவே கர்வம் கொள்ளத் தக்கவர்களாயிருக்கிறார்கள். இங்கிலீஷ் கல்வியினால் அவர்களுக்கு நியாயமான அவாக்கள்

[illegible] அவர்கள் பெருங் கருத்துக்களை [illegible] வேற்ற [illegible] வருகிறார்கள். அவை முடிவடைவதில் [illegible] தாமதமும் குறையும் ஏற்பட்டபோதிலும் அவை [illegible] என்பது திண்ணமேயாகும்.

இங்கிலண்டுடன் சண்டை ஏற்படாது.

[illegible] இந்தியாவின் எதிர்காலத்தில் சர்வாதிகார விரோதிகள் (Anarchists) ஏற்படுவார்களென்ற பயத்திற் கிடமேயில்லை. [illegible] டன் [illegible] இல்லை. எதிர்காலத்தில் அபாயமுண்டாகாதென்று [illegible] இங்கிலேயரின் [illegible] அரசுமுறையிலேயே [illegible] இந்தியா [illegible] தான் [illegible] என்று. [illegible] ஜனங்கள் [illegible] விரோதமாயிருக்கிறார்களென்றும், பல [illegible] தான் அடக்கப்பட்டிருக்கிறார்களென்றும் பொருள்படும். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] விருப்பதே [illegible]. [illegible], [illegible] (என்ற மகான்களின்) பாதையாகிய [illegible] இந்திய தேசத்தின் பொதுப்பாதையாகிவிட்டது. இந்தியாவின் வருங்காலம் இங்கிலண்டோடு பிணைக்கப்பட்டிருக்கின்றது.

எப்போதும் இந்தியாவுக்கு அவசியமேற்படும்போது வழி காட்டுவதற்கும், துணை நிற்பதற்கும், காப்பதற்கும் அத்தேசம் இங்கிலாண்டையே நாடவேண்டும்.

இந்தியாவின் ராஜபக்தியும் இந்தியரின் ஆசைகளும்.

இந்திய ஜனங்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிருப்திகொள்ளவில்லை. ஆனால் அவர்களுக்கு வேறு அன்னியர்கள் வரவேண்டுமென்ற விருப்பம் கிடையாது. ஆங்கிலேய ஆட்சி நடுபட்டுப் போமாயின் அளவிடற்கரிய விபத்துண்டாகுமென்று அவர்களுக்குத் தெரியும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை தேசத்தினின்று அகற்ற வேண்டுமென்று இந்தியாவில் கல்விகற்ற வகுப்பினருக்குச் சிறிதேனும் விருப்பமில்லை. ருஷியரென்றால் அவர்களுக்குப் பெருந்திகில். கல்விகற்ற இந்தியருக்கு ருஷியாவிடத்திலிருக்கும் வெறுப்பானது ஒருவேளை சாதாரணமான ஆங்கிலேயருக்கு ருஷியாவிடமுள்ள வெறுப்பைக்காட்டிலும் மிகுதியாகும். எந்த ருஷியனேனும் இங்கிலாந்தின் ஸ்தானத்தை ருஷியா பற்றிக்கொள்ளும் காலத்தை இந்தியா நாடுகிறதென்று கூறக் கண்டால் அவன் பெரிதும் பிழைக் கருத்துக்கொண்டவன். இந்திய ஜனங்கள் இங்கிலாண்டினிடம் விசுவாசம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில காலத்திற்கு முன் லார்ட் கர்ஸன் இந்தியாவிற்குத் திரும்பியபோது அவரை வரவேற்ற பம்பாய் ஜனங்களிடம் அவர் பேசின பொழுது கூறினது:— "இந்தியாவிலிருக்கும் சகல ஜனமனைத்தும் பிரிட்டிஷ் சர்க்காரின் நற்கருத்திலும் மேலான நன்னயத்திலும் நீதி பராக்கிரமத்திலும் விசுவாசம் கொள்ளும்படி நான் பிரார்த்திக்கிறேன்" என்றார். இந்தியா ஜனங்கள் ஆங்கிலேயரின் நற்கருத்திலும் யோக்கியதையிலும் மெய்யாகவே விசுவாசங்கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கல்விப் பயிற்சிக்காக அவர்கள் நன்றிகொண்டிருக்கிறார்கள். அவர்களனுபவிக்கும் சுதந்தி

ரங்களுக்காக நன்றி பாராட்டுகிறார்கள். அந்நியப்படையெடுப் பிலிருந்து அவர்கள் காக்கப்பட்டிருப்பதற்காக நன்றி பாராட்டுகிறார்கள். ஆனால் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணி யாலும் (மற்றும் உயர்ந்தபதவி கொண்டமனிதர்களாலும்) அவர்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேறவில்லை யென்று உணர்ந்தபோது அவர்களின் நன்றியறிவு சிறிது கலக்கமுறுகின்றது. அவர்களது விசுவாசம் அசைவுகொண்டு விட்டது. அதனால் அவர்களுக்குள் ஒரு ஏமாப்புண்டாகி அது காரணமாக முதிர்ந்து வருகின்றது. பிரிடிஷ் ஆட்சி யார் அவர்களை இகழ்ச்சியுடன் நடத்தி வருவதினாலும், அவர்களுடைய அவாக்களைக் கேவலமாக மதித்து விடுவதி னாலும், அவர்களுக்குக் கோபமுண்டாகின்றது. தாழ்ந்த உத்தி யோகங்கள் மாத்திரமே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின் றன. ஆனால் அவர்களுக்குள்ளே சென்ற 50 வருஷகாலமாக இங்கிலீஷ் கல்வி பெருவாரியாக படைத்திருத்தலைக் கணிக் காமல் அவர்களது சொந்த தேசத்தின் காரியங்களை மேற் பார்ப்பதில் அவர்களுக்குக் காலக்கிரமத்தில் உரித்தாகும் நிலைமை வருமாறு அவர்களை பழக்கப் படுத்தும் பொருட்டு பிரிடிஷார் யாதும் செய்யவில்லை. கவர்ன்மெண்டார் ஜனங்க ளிடம் விசுவாசம் வைக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுப்பதில் அதிகம் கூடாதென் றும் அவர்கள் கேட்கிறார்கள். வெறும் பேச்சில் சமத்துவம் போதாது; மெய்யான சமத்துவமும், கவர்ன்மெண்டின் நிருவாக அதிகாரமும், உத்தியோகங்களும் வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள்.

ராஜாங்க நிருவாகப் பயிற்சி.

இந்தியாவுக்கு இதுவரை வந்திருக்கும் வைசிராய்களிலெல் லாம் மிகவும் காருண்ணிய முள்ளவரும் ஜனங்களின் அன்பு பெற்றவருமாகிய லார்டு ரிப்பன் தமது ஸ்தல சுய ஆட்சி ஆலோசனையைப்பற்றிப் பேசும்போது அது ஜனங்

களின் ராஜாங்க நிருவாகப் பயிற்சிக்கு ஓர் கருவியாக இருக்குமென்று கூறியது நியாயமேயாகும். இந்தியாவில் நாம் கடைசியாக ஓர் சுயாதீனமான கவர்ன்மெண்டை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்புவோமாயின் ஜனங்களுக்குத் தன்முயற்சியும், தற்காப்பும் ஏற்படும்படி பயிற்றுவதே சரியாகுமென்பதும் உண்மையெனக் கூறலாம். லார்டு ரிப்பனும் அவரது அரசிறை மந்திரி (இப்போது இவருக்கு லார்டு குரோமர் என்று பெயர்) யும் [illegible] காலம் இந்தியச் சரித்திரக்காரர்களால் கிருதயுகம் போலப் பாவிக்கப்படுகின்றது. அக்காலத்தில் கல்வி விருத்தி தூண்டப்பட்டது. சுயாதீனம் [illegible]. இந்தியா முழுதும் ஒரே பெருந்தன்மையாகக் [illegible] இடப்பட்டன. [illegible] பல்யான [illegible] யமானது இவ்வித [illegible] செய்கை செய்வதில் [illegible] ஜனங்களுக்குக் கிடைத்திருக்கும் அநுகூலங்கள் [illegible] வெளிப்பட்டுவருகின்றன. "இந்தியாவிற்கு [illegible] ஸ்தாபனங்களின் மூலம் இப்போதிருக்கும் [illegible] நோக்க, இந்திய ராஜதந்திர விஷயங்களில் [illegible] ராஜதந்திரத்திற்குப் [illegible] பயன்படக்கூடியனவும் வன்மை கொண்டனவுமாகிய விஷயங்களிருக்கின்றனவென்றும் இவ் விஷயங்களெல்லாம் பழக்கம் பெற்ற பிறகு ராஜதந்திர விஷயங்களில் பிரவேசிப்பது எளிதாகவும் அபாயமற்றதாகவும் இருக்குமென்றும்" எனச் சொல்லுகிறார்கள்.

"டைம்ஸ்" பத்திரிகை சொல்லுகிறது:—"நாம் மறுபடியும் [illegible] சிறிது சிறிதாகப் பின் வாங்கிச் சென்று இந்தியர்களுக்கு ஒழுக்கமும் அறிவும் உண்டாக்குவதிலேயே நமது முயற்சிகளையெல்லாம் செலவிடவேண்டும். அப்போது தான் அவர்களை ஸ்தல சுய ஆட்சியின் பல்வேறு தொழில்களில் பிரவேசிக்கவிடலாம். உண்மையான கல்விகற்ற

இந்தியர்கள் தலைமுறை தலைமுறையாகத் தோன்றிச் செல்லும்வரை நாம் காத்திருக்கவேண்டும்'' என்கிறது. புதிதாகக் கல்விகற்ற வகுப்பினரின் குறைவுகள் இப்போது அதிகத் தெளிவாகக்காணப்படுகின்றனவென்றும் கீழ்த்திசை ராஜாங்க விவகாரங்களின் சிக்கல்களெல்லாம் இப்போது தான் அதிகத் தெளிவாக விளங்குகின்றனவென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இதெல்லாம் கீழ்நோக்கு முறையின் பிதற்றல்கள். இதெல்லாம் வெற்று மனோபாவமேயாகும். ஜன ஒழுக்கவளர்ச்சியை விருத்திசெய்வதற்கு நாம் ஓர் துர்ப் பலமான கருவியை உபயோகிப்போமானல் அவ்வளர்ச்சி முற்படுமென்று எதிர்பார்க்க எங்ஙனம் முடியும்? நமது சட்டங்களும் பள்ளிக்கூடப் புத்தகங்களும் ஜன ஒழுக்கத்தை எவ்வளவு உயர்த்துகின்றனவோ, அதனிலு மதிகமாக, நாம் வேண்டுமென்று ஜனங்களை அதிகாரத்திலிருந்து நீக்கி வைத்திருக்கும் முறைமையானது ஜன ஒழுக்கத்தைத் தாழ்த்தி விடும். எப்போதும் அந்நிய அதிகாரிகளையே சார்ந்திருக்கும் தேசம் விருத்தி யடைதல் சாத்தியமன்று. நாம் எத்தனைக் கெத்தனை ஜனங்களிடம் நம்பிக்கை வைக்கிறோமோ, எத்தனைக்கெத்தனை அவர்கள் சொந்தகாரியங்களை மேற்பார்க்கும் அதிகாரம் அவர்களுக்கே கொடுக்கிறோமோ, அத்தனைக்கத் தனை அவர்களுக்கு "ஒழுக்கமும் அறிவும்" விருத்தியாவதை நாம் காணலாம். இந்தியாவிலிருக்கும் பிரிடிஷ் அதிகாரிகளுக்குப்பெரியதும் இணையற்றதுமான கடமையொன்றிருக்கிறது. அக்கடமைக்கு எத்தனை திறமையும் ஊக்கமுமிருந்தபோதிலும் பயன்படாது. ஜனங்களைத் தமக்குத் தாமே வேலை செய்து கொள்ளும்படி பயிற்றுவதற்கும், ஜனங்களிடமிருக்கும் திறமைகளுக்குத் தக்க சௌகர்யஞ் செய்துகொடுத்து அத்திறமைகளைத் தூண்டிவிடுவதற்கும், பொதுக்காரியங்களை யேலாது கீழ்ப்பட்ட நிலைமையிலிருந்து தமது உயர் பொறுப்புகளை நிறைவேற்றும் தகுதிக்கு ஜனங்களைத் தூக்கிவிடுவதற்கும் தகுந்த மேலான அறிவிருந்தால்

மட்டிலும்தான் பயனுண்டாகும். கவர்ன்மெண்டாரின் சொற்ப உதவியை வைத்துக்கொண்டு எந்தத் தேசம் தனது சொந்த காரியங்களைத் தானே கவனித்துக்கொள்ளுகிறதோ அதுதான் நன்கு ஆளப்படுகின்ற தேசமாகும். ஜனங்களின் சுய முயற்சியை வளர்க்காமலும், ஜனங்கள் தமது சொந்தப் பிரயத்தனங்களாலே தமது நோக்கத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசைகளைத் தூண்டிவிடாமலும், இருக்கும் எந்த அரசுமுறையும் விருத்திக்கேனும் நன்மைக்கேனும் உரியதாக மாட்டாது.

சுய ஆட்சி.

இங்கிலாந்து தேசம் தனது பெருங் குடியேற்ற நாடுகளின்மீது வைத்திருக்கும் உண்மையான சம்பந்தங்கள் முழுதும் சுய ஆட்சி முறையைப் பொறுத்திருக்கின்றன. அதுமட்டிலுமன்று, உலகம் முழுதிற்கும் சுய ஆட்சி முறையே கடைசிவரை நிலைக்கப்போகின்றது. செறிவுகொண்ட சுய ஆட்சி நாடுகளை அமைத்து அவற்றைத் தொகுத்துப் பொது நோக்கங்களைப்பற்றி ஓர் மத்திய அதிகாரத்திற் சார்புற்றிருக்கச்செய்வதே நாகரிக உலகத்தின் ஏகாதிபத்தியத்தின் நோக்கமாக இருக்கின்றது. மிகப் பரந்ததும் செறிவுற்றதுமான இடமும் அநேகமாய் ஒரேமாதிரி ஜனத்தொகையுமுடைய அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சுய ஆட்சியும் ஒற்றுமைப்பாடும் கலந்திருக்கின்றன. பழைய உலகத்தில் ஐரோப்பா கண்டத்து ராஜ்யங்களெல்லாம் தம்மைச் சுருங்கிய எல்லைக் குட்படுத்திக்கொண்டுவிட்டன. அதனால் அவற்றுக்குப் பிரிடிஷ் ராஜ்யத்தைப்போல அகன்ற ஏகாதிபத்தியத்தா லுண்டாகும் பலவகை விவகாரத் தொந்தரைகள் குறைந்திருக்கின்றன. ஆனால் பொதுவாகப்பேசுமிடத்து அவை பொதுச் சரித்திரங்களாலும் சூழல்களாலும் பொது நோக்கங்களாலும் நன்றாய்த் தொகுக்கப்பட்டுச் சேர்ந்த பேரரசுகளாகும். ஸ்தல அனுகூலங்களைப்பற்றியும் அல்லது இணக்கு

தர்மசிய ஜாதி [illegible] பற்றியும் என்று [illegible] அசாத்தியமாகு [illegible] சுய ஆட்சி கொடுக்கப்பட்டிருக்கின்றது. [illegible] செல்வத்தையும் [illegible] இப் [illegible] அறிந்துகொள்ள [illegible] கிடையாது. [illegible] சுய ஆட்சி [illegible] சுய ஆட்சி [illegible] ஆட்சி [illegible] பெற்றவர்களுக்கும் [illegible] காட்டிலும் [illegible] ஆகிறது. [illegible] தந்திரங்களின் [illegible] களுக்குப் [illegible] கொடுக்கப்பட்டன. [illegible] கொண்டு [illegible] பெற்றவர்கள் [illegible] கின்றன. [illegible] பெற்றுத் [illegible] தோக்கும் [illegible] விளக்கும்.

இவ்விஷயத்திற்கோர் தீர்மானம்.

[illegible] இம்முறையை அனுசரிப்பதே [illegible] பாகங்களைச் சட்ட

சபைகளிருக்கின்றன. அவற்றில் இந்திய ஜனங்களுக்குச் சிறிதளவு பிரதிநிதியமைப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தில் சிறிது அனுகூலம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், நாங்கோரும் தேவைகள் விருத்தியடைந்துவருவதை நோக்கின், இவ்வனுகூலம் போதாது. ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் பிரதிநிதியமைப்பை அதிகப்படுத்துவதினாலும் கடைசியாகச் சுய ஆட்சி படிப்படியாக அதிகாரமும் வன்மையும் அதிகமாகக் கொடுத்துவருவதினாலுமே நாம் இந்தியாவின் அவாக்களுக்குத் தகுந்த பலனும் முதிர்ச்சியும் கொடுத்தவர்களாவோம். இந்தியாவை ஆளுவோர் நிறைவேற்றுதற்கு இந்நோக்கம் தகுதியற்றதன்று. இந்தியர் அடிமைத்தன்மையில் ஆழ்ந்து கிடந்ததைக் கண்டு பிறகு நமது ஆட்சி முறையால் அவர்களுக்குச் சுய ஆட்சியில் விருப்பமுண்டாகச் செய்திருப்பது நமக்குப் பெருமையாகும். எண்பதிற் கதிகமான வருஷங்களின் முன்னமே லார்ட் மெகாலே காமன்ஸ் சபையில் "இந்தியா ஜனங்களின் மனது நமது முறையால் வளர்ச்சிபெற்று அதிவிருத்தியடைந்துவிடக்கூடும். நல்ல கவர்ன்மெண்டினால் நாம் நமது குடிகளை இன்னும் நல்ல கவர்ன்மெண்டுக்குத் தகுதியுடையவராக்கிவிடக்கூடும். ஐரோப்பிய அறிவில் தேர்ச்சிபெற்று அவர்கள் ஐரோப்பிய ஆட்சி முறைகள் வேண்டுமென்று கேட்கக்கூடும். அப்படி ஒருநாள் எப்போதேனும் வருமோ என்பதை நான் அறியமாட்டேன். ஆனால், அதைத் தடுக்கவாவது தாமதப்படுத்தவாவது நான் முயலமாட்டேன். அந்த தினமே இங்கிலண்டின் சரித்திரத்தில் பெருமை மிகுந்த தினமாகும். அந்த தினத்தின் உதயம் இப்போது தோன்றிவிட்டது" என்றார். சுய ஆட்சியின் முழுவிருத்தி யேற்பட இன்னும் நெடுங்காலம் செல்லும். ஆனால், ஆரம்பங்கள் அமைக்கப் பெற்றுவிட்டன. பாதைகள் [illegible]விட்டன.

"இந்தியா ஐக்கியநாடுகள்."

ஜான் பிரைட் பின்வருமாறு நம்பிக்கொண்டிருந்தார்:— "இந்தியாவானது சிறிது சிறிதாக விருத்தியடைந்து தனக்குரிய நிலைமை அடையும். அது சுயாதீன தேசமாகி குழப்பத்தினாலும் சண்டையினாலும் பிரிந்துபோகாது. தாய்த் தேசத்திலிருந்து பலவந்தமாகக் கிழிபட்டும் போய்விடாது. இங்கிலண்டின் எதிரிகள் வசமும் சேர்ந்து விடாது. ஆனால் பெருமைதங்கிய பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் தொகுக்கப் பட்ட பாகங்களிலொன்றாக இருக்கும்." இந்நம்பிக்கையானது வீண் மனோரதமாய் விடமாட்டாது. இங்கிலண்டின் குடியேற்றங்களுடன் சமத்துவ நிலையில் இந்தியா இறுதியாக வைக்கப்படுவது திண்ணம். இந்தியதேசாபிமானியின் பேரெண்ணம் பின் வருவதாகும்:—சுயாதீனமுள்ள தனியான மாகாணங்கள் ஸ்தாபிக்கவேண்டும். ஸ்தல சுய ஆட்சியுடன் இணங்கி அவைகள் இந்தியாவின் ஐக்கிய நாடுகளாக வேண்டும். அவை இங்கிலண்டின் ராஜாங்கணையின் கீழ் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். இது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையே. இதனை மெல்ல மெல்ல நிறைவேற்றுதல் கவர்ன்மெண்டின் பெருங்கடமையாகும். இதுவே இந்திய ஜனங்களின் நோக்கமும் அவாவுமாம். ஜனங்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறிவரும் இத்தருணத்தில் புது முறைகள் ஸ்தாபிக்கவும், வழிகாட்டவும், அனுதாபமளிக்கவும் கவர்ன்மெண்டார் வல்லோராயிருக்கின்றார்கள். இது வெறும் அரசாட்சித் திறமையைப் பொறுத்ததன்று. ராஜ தந்திர நுட்பங்களைப் பொருத்த விஷயம். அரசாட்சி பண்ணுவதற்கு இந்தியாவைக் காட்டிலும் எளிதான தேசம் வேறொன்றும் கிடையாது. அங்கே ஜனங்களெல்லாம் மிகப்பணிவுள்ளவர்கள்; சட்டத்துக் கடங்கியவர்கள்; பிறர் சக்திக்கு இலேசாக உட்படக் கூடியவர்கள். பணிவு கொண்டோரும் பிறதேசத்தார்க்குக் குடிகளுமாகிய ஜனங்களுடைய காரியங்களை மேல் நடத்தல் எளிது. பிடிவாதமுள்ள ராஜாக்களைப்

பலவந்தமாக அடக்குவதும், மாகாணங்களைச் சேர்ப்பதும், குழப்பத்திலிருந்து கொடுங் கோன்மையால் ஒருவித ஒழுங்குண்டாக்குவதும் பிரிடிஷ் ஆயுதங்களால் முடியக்கூடிய காரியம். ஆனால் இதைக்காட்டிலும் பிரிடிஷார் செய்யவேண்டிய பெருங்கடமை யொன்றுளது. வெவ்வேறு ஜாதிகளையெல்லாம் அவர்கள் விருப்பமே ஆதாரமாகப் பெற்ற ஒரு ஜனத்தாராக்கி, அவர்களின் தேசாபிமானக்கருத்துக்களுக்கெல்லாம் இடங்கொடுத்து, இங்கிலண்டு இந்தியாவின் சம்பந்தங்களுக்கு என்றும் நிலைத்த ஆதாரமாக இந்தியரின் நாட்டுத்தொகுப்பும், சுய ஆட்சிச் சுதந்திரமும் உண்டாவதைக் காத்து, வளர்த்து, ரக்ஷிப்பதுவே அப்பெருங் கடமையாகும். இதுவே இந்தியாவின் எதிர் காலத்தைப்பற்றிய கோரிக்கை. ராஜதந்திரிகள் இதனைக்காணக் கூடிய தூரதிருஷ்டியுடையவர்களாயிருப்பதே தகுதி. இந்த தூரதிருஷ்டி யுண்டிருப்பது நம்மெல்லோருக்கும் நன்மையே. ஆகையால் இந்தியாவின் எதிர்கால நிலையைப்பற்றிய எண்ணம் நம்மெல்லோருக்கும் தெரிந்திருத்தல் நலம். அவ்வெண்ணமானது வளர வளர அதிகப் பருமன் கொள்கின்றது. இன்னும் முடிவு செய்யப்படாத பொருளாதார நிலைத் திருத்தங்களும். (Economic Reforms) ஆசாரத்திருத்தங்களும் (Social Reforms) ராஜாங்க ஸ்திதி பற்றிய இப்பேரெண்ணத்துடன் தனித்துத் தெரியாமல் வந்து கலக்கின்றன.

பொருள் நிலைபற்றிய விவகாரம்

இந்தியாவின் பொருள் நிலை விவகாரத்தைப்பற்றிச் சிறிது பேசுகின்றேன். அதாவது, அத்தேச ஜனங்களின் ஏழைமையே. இந்தியாவின் பொருள் நிலையைப்பற்றி ஆலோசிக்கும் எவனும், ஜனங்களிற் பெரும்பாலார் நில விவசாயத்தினாலே பிழைக்கின்றமை அத்தேசத்தின் பெருந் தீமைகளிலொன்றென்பதைப் பற்றிச் சந்தேகமுறமாட்டான். ஆங்கிலேயர் தங்கள் முதலைப் போட்டு நடத்தும் பெருந்

தொழிற்சாலைகளின் ஸ்தாபனமானது அத்தேசத்தில் ஒரு காலத்திற் பார்த்து செழித்த தேசத் தொழில்களுக்குத் தக் கேடாகமாட்டாது. இந்தியாவிலிருந்து விளைபொருள்களை அனுப்பிவிட்டு அதிக முக்கியமான கைத்தொழிற் பொருள்களுக்கெல்லாம் இந்தியா இங்கிலாந்தின் கைபார்த்து நிற்பது இந்திய தேசாபிமானிகளுக்கெல்லாம் மனக்கசப்பை யுண்டாக்குகின்றது. ஓர் அன்னியக் கூட்டத்தார் அவரது (இந்தியரது) தேசத்தில் வந்திருந்துகொண்டு, சுதேசத்தாரை போஷித்தற்குரிய லாபங்களையெல்லாம் அன்னியர் உறிஞ்சி செல்வதைப் பார்க்கும்போது அவர்களுக்கு மனவருத்தமுண்டாக்குகிறது. அன்னியர் அந்நாட்டில் வர்த்தகம் நடத்துவதில் அத்தேசத்தார்க்கு ஏற்பட்டிருக்கும் விரோதமானது அதனால் சுயநல சம்பந்த அபிவிருத்தியே தடைப்படுகிறதென்ற எண்ணத்தினாலேயே உண்டாயிருக்கிறது. அவர்களுடைய பொருளுற்பத்தி வசதிகள் குறைந்து அந்நாட்டு விளைவுகளெல்லாம் தேசத்தொழில் விருத்திக்கே பயன்படுத்தப்படுவதையே தேசாபிமானிகள் பெரிதும் விரும்புகின்றனர். அவர்கள் உறுதியாக்கவெண்ணுவதெல்லாம், இந்தியர்களுக்கு தமக்குத்தாமே தேவையானவற்றைச் செய்துகொள்ளவேண்டும் என்ற அறிவுகளைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வண்ணம் விருப்பதற்குத் திருப்தியான அநேக காரணங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் கஷ்டமாயிருக்கின்றன. [illegible] கைத்தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இந்திய கைத்தொழில் விருத்தி பண்ணப்பட்ட நிலைமையில் முன்னேற்றமடைந்தவை இருக்கின்றது. ஆனால் ஆரம்ப அடிகள் எடுத்து வைக்கப்படுகின்றன. இந்திய முதலாளிகளே தொடக்கம் செய்திருக்கிறார்கள். ஆரம்பம் சொற்பமாகவே இருக்கின்றது. இப்போது நகர சொற்பமாயிருக்கின்றது. ஆனால் ஒரு மனிதனுடைய கையகலத்துக்கு மேற்படாத சிறு மேகம் வளர்வதுபோல அவ்வாரம்பங்கள் வளர்ந்து, மிகவும் பயன் தரத்தக்கவாறு பெருகக்கூடும்.

கீழ்த்திசைத் தேசங்களில் மேலைத்தேசங்கள் விளைக்கும் மாறுபாடு.

ஜப்பானை அதன் தற்கால நிலைமைக்குக் கொண்டுவந் ...ருக்கும் சக்தியாவது நிறைந்த தேசாபிமானமே. இத் ...தேசாபிமானம் ஜப்பானது இராஜ்ய நிலையிலிருந்து உண்டா ...ருக்கிறது, அதனையே பொறுத்திருக்கிறது. சுயாதீனத்தி ...லேயே உண்டாகக்கூடிய பொது நல முயற்சி மீது அத் ...தேசாபிமானம் அமைப்புற்றிருக்கின்றது. இந்தக் கிழக்குத் ...க்காரரின் ஒழுக்கத்திறல் எத்தனை தூண்டுதல் உண்டா ...க்கின்றது? தேசாபிமானத்தின் வல்லமையைப்பற்றிக் ...த்தேசத்தாருக்கு இது எத்தனை சிறந்த திருஷ்டாந்த ...ரும்? இந்த திருஷ்டாந்தம் இந்தியாவில் பயன்படாது ...ய்விடவில்லை. ஜப்பானில் நாம் பார்த்தது போல அத்தனை ...மான எழுச்சி இந்தியாவி லுண்டாவதற்கு ஹேதுக்க ...லையாயினும், இந்தியாவின் ராஜதந்திர விஷயத்தில் ...பிப்பிராயம் எத்தனை மாறுபாடுகளடைகின்றதோ அத் ...ர மாறுபாடுகள் ஜனசமூக நிலை, ஒழுக்கநிலை, சமயநிலை ...வியவற்றிலு முண்டாயிருக்கின்றன. இந்தியா தனது ...ரதீனத்தை இழந்திருக்கின்றது. கீழ்த்தேசத்துச் சாமா ...யமான ஜனசமூகத்தின் மீது இயங்கி வருகின்ற மேல் ...டு நாகரிகத்தின் எளிதாய்க் நெகிழக்கூடிய சக்திகளை ...ல்லாம் காந்தம்போல் ஒருங்குசேர்த்துப் பிடித்துக்கொண் ...ருப்பதற்கு ஓர் புதிய தேசாபிமானம் முளைத்துவருகின்றது. ...சக்திகளின் செய்கையால் பழைய அமைப்புக்களெல்லாம் ...ருங்கிவருகின்றன. இங்கிலீஷ் படிப்புக் காரணமாக ...நேக நூற்றாண்டுகளின் தொடர்ச்சி உடைந்துபோய்விட் ...து. ஆதலால் இந்தியாவானது ஓர் புது ஒழுங்கு ஸ்தாபன ...வதற்குமுன்னதாக ஏற்படக்கூடிய மாறுபாட்டுக்காலத்தை ...டைந்திருக்கின்றது. மற்ற எல்லாவிஷயங்களைக் காட்டிலும் ...ல்வி விஷயத்தில்தான் அத்தேச ஜனங்கள் சுய ஆட்சிக்கு

முதிர்ச்சி பெற்றவர்களாயிருக்கிறார்கள். ஒழுங்கான கல்வியானது ஏற்கெனவே (கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத) ஜனங்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றது. அதிகாரிகளின் நிர்ப்பந்தங்களை இன்னும் பலப்படுத்தும் நோக்கமுடைய முறை கீழ்நோக்கிய முறையாகும். அம்முறை இந்தியரில் ஒவ்வொரு வகுப்பினராலும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அம்முறை சிறிதுகாலத்திற்கு நடைபெற்று வந்தபோதிலும் அதுபேதைமையுடைத்தாயிருப்பதுபோலவே ஸ்திரமற்றதாகவும் முடியும். இந்திய ஜனங்களுக்குள்ளே கல்விகற்றோரைக் கொண்டுதான் மற்ற ஜனங்களுக்கு இக்குழப்பக் காலத்தின் மூலமாக யாதொரு தொந்தரவு மேற்படாமல் நடந்து வருவதற்கு வழிகாட்டும்படி செய்யமுடியும். தமது பழமுறைகளைக் கூடியவரை மதித்துப் புது மாறுபாடுகள் ஏற்படுத்த அவர்களால்தான் முடியும். இப்போது அவர்களுக்கேற்பட்டிருக்கும் புதுச் சூழல்களுடன் பழமுறைகள் பொருந்தச் செய்தல் இன்றியமையாததாகும். கீழ்த்திசை ஜனங்களிடம் மேல் நாட்டுக் கருத்துக்களை ஒட்டுவிக்கும் விஷயமானது மேல் நாட்டு நாகரிகம் பற்றிய அறிவை முழுதுமுடையோர்களும், தமது சொந்தப் பழமைகளை மறவாதவர்களுமாகிய கீழ்த்திசைக் கற்றோர்களாலேதான் முடிவு செய்யப்படவேண்டும்.

ஸிவில் ஸர்வீஸைப் புதுவகையாக அமைத்தல்.

நிற்க, மறுபடியும் ராஜாங்க விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்வேன். அரசாட்சித் திருத்தத்தில் முக்கிய அம்சம் யாதெனின், யூரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்குப் பதில் மெல்ல மெல்ல இந்திய உத்தியோகஸ்தர்களை அமைப்பதுவேயாகும். இந்தியா தனது முயற்சிகளை ஒருங்குசேர்த்து வருகின்ற முக்கிய நோக்கம் அதுவே. இந்த விருப்பத்திற்கிணங்கிவிடுதலே இந்தியாவின் ஆசைகளிலெல்லாம் மிக்க

நியாயமான தொன்மைத் திருப்திசெய்வதற்கு மார்க்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்கு ஸிவில் ஸர்வீஸை முழுதிலும் மாற்றி யமைத்தல் அவசியமாகும். சென்ற ஒரு நூற்றாண்டில் இந்திய ஆட்சியின் அமைப்பில் மாறுபாடு எத்தனை குறைந்து ஏற்பட்டிருக்கிறதென்பதைக் கருத ஆச்சரியமுண்டாகிறது. ஸிவில் ஸர்வீஸின் இயற்கையானது விதிப்படி மாறுபாடென்பதே யின்றியிருக்கின்றது. அது மிகவும் சிறந்த புராதனமான ஸர்வீஸ். மற்றையோரைக் காட்டிலும் நான் அதைப்பற்றி மிக மதிப்புடன் பேசவேண்டியவன். அந்த ஸர்வீஸிலே தாய்த்தேசம் நியாயமானபடி கர்வமடையத்தக்க மனிதர்கள் பலரிருந்திருக்கிறார்கள். என்றாலும் அது ரகசியக் கூட்டத்தாராட்சி முறையும் தன்னரசு முறையுமாக இருக்கின்றது. அவ்வமைப்பானது அந்நிய ராட்சிக்கே பொருந்தியதாகும். அதற்கு நேர்ப்பட்டிருக்கும் மாறுபட்ட நிலைமைகளுக்கு அது இயற்கையிலேயே பொருந்தாமையால் சிறிது சிறிதாக துர்ப்பலமடைந்து வருகிறது. நெடுங்காலம் சிறந்த வேலைசெய்து முடித்திருப்பதால் அந்த ஸர்வீஸ் அழிந்துவிடுதல் அவசியமாகும். அதனிலும் அதிக ஜன இணக்கமுடைய ஓர் முறை ஏற்படவேண்டும். இம்முறையானது பழைய ஸர்வீஸின் குற்றங்களொன்று மின்றி அதன் திறமையை மட்டிலுக் தொடர்ந்து வகிக்கத் தக்கதா யிருக்கவேண்டும். ஜனப்பிரதிநிதி ளாதிகமாக உடையதும், ஒற்றை மனிதர்களின் அதிகாரம் குறைந்தது மான ஓர் ஆட்சி முறையில் கவர்ன்மென்ட் அமைப்புறவேண்டும். லார்டு ரிப்பன் கொண்டிருந்த ஆட்சிக் கொள்கைகள் இத்திருத்தத்திற்குப் பாதைபோட்டு வைத்திருக்கின்றன. ஏற்கெனவே, அதிகாரத்தை ஓரிடத்திற் கொண்டு குவிக்கும் முறைமைக்குப் பதில், ஸ்தல சுயஆட்சி முறை ஏற்பட்டு வருகின்றது. அரசாட்சி யுத்தியோகஸ்தர்களை அவ்வஸ்தலத்தின் ஸ்திரமான வாசிகளுக்குள்ளிருந்து வரவர அதிகமாகத் தெரிந்தெடுத்தலே காலக்கிரமத்தில் சகஜமாய்விடும். அடிக்

கடி உத்தியோகஸ்தர் இடம் மாறுதலும் ஆள் மாறுதலுமாகிய தீயவழக்கம் அப்போது நின்றுபோய்விடும். ஐரோப்பிலிருந்து அன்னியர்களைத் தருவித்தும், அந்தந்த மாகாணமொழிய மற்ற மாகாணங்களிலிருந்து இந்தியர்களைத் தருவித்தும் நாம் இப்போது நடப்பிக்கும் காரியங்களையெல்லாம், அவ்வவ் விடத்து இந்தியர்களை நியமித்து நடத்தினால் காரியங்கள் திறமையாகவும் லாபகரமாகவும் நடக்கும்.

நிருவாக வேலையையும் நீதிவேலையையும் பிரித்தல்.

அந்த ஸர்வீஸின் நீதியிலாகாவில் மாறுபாடுகள் உடனே செய்த லவசியம். அந்த ஸர்வீஸின் மெம்பர்கள் வெகு யௌவனமுடையவர்களாகவும் ஆங்கிலேயராயிருக்கும்பக்ஷத்தில் ஸ்தலபாஷை சிறிதேனு மறியாதவர்களாகவும் இருக்க, அவர்களுக்குக் கொடுக்கப்படும் "மாஜிஸ்ட்ரேட்" அதிகாரங்கள் அதேமாதிரி உத்தியோகஸ்தர்களுக்கு வேறெந்த நாகரிக கவர்ன்மெண்டிலும் கொடுக்கப்படும் அதிகாரங்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகப்பட்டிருக்கின்றன. இவர்கள் அடிக்கடி தப்புச் செய்கைகள் செய்யாமலும் சில சமயங்களில் தமது அதிகாரத்தைக் கெட்ட வழியில் பயன்படுத்தாமலும் இருப்பார்களானால் அதேதோர் ஆச்சரியமாகும். (அவர்களின் மீது குற்றமில்லை.) குற்றமெல்லாம் அந்த முறையின் மீதே யாகும். இந்தியாவின் பெரும்பாகத்தில் முக்கியமான 'நீதி' உத்தியோகங்கள் பிராய முதிர்ச்சியற்ற இந்தியர்களாலேனும் ஆங்கிலேயராலும் வகிக்கப்படுவதற்கு இக்காலத்தில் யாதொரு காரணமும் இல்லை. இன்னுஞ் சிலகாலம்வரை "தந்தை யாட்சி முறை" (Patriarchal System) இருக்கக்கூடியதாகிய சில நாகரிகங்குறைந்த பிரதேசங்களைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் வயதினாலும், பயிற்சியினாலும், அனுபவத்தாலும் தமது அதிகாரத்தைத் தக்கவாறு செலுத்துவார்களென்று நம்பும்படியான ஸ்திதிய

விருப்போர்களுக்கு நீதி யதிகாரங்கள் கொடுக்கப்படவேதே நீதிபரிபாலன விஷயத்தில் இப்போது அவசியம் செய்யவேண்டிய சீர்திருத்தமாகும். பொறுமை, பகுத்தறிவு, சட்ட சம்பந்தமான புராதன அனுசாரணைகளில் மதிப்பு, ஊர் வதந்தியையும் வெளிப் பிரஸ்தாபத்தையும் சிறிதேனும் கவனியாமை, இவை நீதி யுத்தியோகத்திற்கு அவசியமான குணத்திற் சிலவாகும். ஓர் வரிவில் உத்தியோகஸ்தனுக்கு ஒரு காலத்திலேனும் இக்குணங்கள் சம்பாதித்தற்குத்தருணம் கிடையாது. இந்திய வரிவில் உத்தியோகஸ்தனுடைய பயிற்சி முழுதும் அவனை நீதி யுத்தியோகத்திற்குத் தகுதியற்றவனுக்குகின்றது. நீதியதிகாரத்தை நிர்வாக அதிகாரத்தினின்றும் முற்றிலும் துண்டித்துவிடுவதே இதற்குத் தக்க நிவாரணம். மற்றத் தேசங்களி லிருப்பதுபோல "நீதி" உத்தியோகங்கள் அவற்றின் கடமைகளை வகிக்கப் பயிற்சிபெற்ற வக்கீல்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். மற்றெந்த வழியினுலேயும் துண்டிப்பு பூர்ணமாகமாட்டாது. மற்றெந்தவழியால் உத்தியோகஸ்தரைத் தெரிந்தெடுத்தபோதிலும் நீதிக் காரியங்கள் சரியானபடி நிறைவேறமாட்டா.

சட்டசபைகளைச் சீர்திருத்தல்

லார்டு ரிப்பன் காலமுதல் செய்யப்பட்ட ஆட்சிச் சீர்திருத்தங்களில் முக்கியமானது யாதெனில், சட்டசபைகளில் சிறிது பிரதிநிதி மைப்பு முறை ஏற்பாடு செய்ததேயாகும். 1892-ம் வருஷத்தில் விதிக்கப்பட்ட "இந்தியன் கவுன்ஸில்ஸ் ஆக்ட்" ஜனங்களுக்குப் பொதுவான திருப்தியையும் கவர்ன்மெண்டாருக்கு அனுகூலத்தையும் கொடுத்திருக்கின்றது. ஆனால் அது சிறிதேனும் பழுதற்றவிதியில்லை. மாகாண கவர்னர்களும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் எத்தனை சாமர்த்தியமுடையவர்களா யிருந்தபோதிலும் எத்தனை இணக்க முடையவர்களா யிருந்தபோதிலும் நீக்க முடியாத சில குறைகள் இவ்விதியிலே யிருக்கின்றன. இந்தச் சபைகளின்

சக்திகளை விருத்தி செய்தல் அவசியம். முக்கியமாக அரசிறை சம்பந்தமான விஷயத்தில் இதன் வன்மையை அதிகரிக்க வேண்டும். தற்காலத்தில் இச்சபைமுன்பு அரசிறைக்கணக்கு கொண்டுவரப்படுகின்றது. அதைப்பற்றிக் கண்டித்துப் பேசுவதற்குமட்டிலும் மெம்பர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் அக்கணக்கின் அம்சங்களை மாற்றியாவது அவைகளுக்கு விரோதமாகவாவது "வோட்" (அபிப்பிராயம்) கொடுக்க அவர்களுக் கதிகாரமில்லை. இந்திய ஜனங்களுக்கு மட்டிலும் சம்பந்தமான விஷயங்களில் வருஷந்தோறும் பெருந்தொகைகள் செலவிடப்படுகின்றன. ஆனால் அப்பணச் செலவில் ஜனப்பிரதிநிதிகளுக்கு யாதொரு அதிகாரமு மில்லை. இச்சீர்திருத்தம் முதலாவது அவசியமாகும். ஆனால் கௌன்ஸில்களில் மெம்பர்களின் தொகையை அதிகரித்தலும் அவசியமே. கோடிக்கணக்கான ஜனத்தொகையுடைய ஓர் மாகாணத்திற்கு 20-பேர் கொண்ட ஓர் சபையில் பிரதிநிதி யமைப்புளதென்று பேசுதல் வெறும் பேச்சேயாம்.

அன்றியும், அத்தேசத்திலே தகுதியாலும் பதவியாலும் கணிப்புக் குரியவர்களான பிரபுக்களை அச்சபைகளிற் சேர்த்து அவற்றின் ஸ்திரத்தன்மையையும் மதிப்பையும் பாது காப்பது அவசியமாகும். இந்தியாவில், எத்தனை மாறுபாடுகளேற்பட்டபோதிலும் அது "பெரியோர் ஆட்சி"யும், "பழமை மதிப்பு" முள்ள தேசமென்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. இந்திய ஸ்தாபனங்களை "ஸாமான்னிய ஜன ஆட்சி" முறைக்குட்படுத்துவது கைகூடவே மாட்டாது. உண்மையான பிரதிநிதி யமைப்புடையனவும், மெம்பர்களதிகரிக்கப் பட்டனவுமாகிய கவுன்ஸில்கள் ஏற்படுத்துவதனால் கல்விகற்ற ஜனங்களுக்கு மாத்திரம் திருப்தியுண்டாவது மன்றி, பெரியோர்களுக்கும் திருப்தியுண்டாகி அவர்கள் உயர்பதவிக்குத் தக்கவாறு ராஜாங்க ஆட்சியின் பொறுப்புகளில் அவர்களுக்கே பாகம் கொடுப்பதாகும்.

சேனைத்திருத்தம்.

ஏகாதிபத்திய ரக்ஷணைக் கமிட்டியாருக்கு முன்பு இந்தியாவில் பிரிடிஷ் சேனையைக் குறைக்கவேண்டுமென்ற விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்வது பயனற்றதென்று பலருக்குத் தோன்றக்கூடும். சுதேசச் சேனையில் சரியான திருத்தங்கள் செய்யும்பக்ஷத்தில் அவசியமான துருப்புக்களின் தொகையைக் குறைத்துவிடுவது சாத்தியமாகும். ஜயிக்கப்பட்ட தேசத்தை(இந்தியாவை)ஆளுதற் கிரண்டுவழிகள்தானிருக்கின்றன. முற்றிலும் அடக்கிவிடல், முற்றிலும் சமத்துவமளித்தல், என்னு மிரண்டு நிலைமைகளுக்கு மத்தியிலே அபாயமற்ற நிலைமை யாதொன்றும் கிடையாது. பின்னதே (முழுச்சமத்துவமே) நமதுநோக்கமாகும். ஸிவில் விஷயமான திருத்தங்களி லெப்படியோ அதுபோலவே ராணுவத் திருத்தங்களிலும் குடிகளுடைய நலனையும் இராஜாங்கத்தின் நலனையும் ஒன்றாக்கி விடுதல் அவசியம். சுதேசச் சேனையானது இப்போது கூலிக்குழைக்கும் தன்மையதாகவே ஏற்பட்டிருக்கிறது. அச்சேனையில் அதிக மதிகமாக எல்லை யோரத்திலும் அதற்கப்பாலுமுள்ள புதிய அறிவற்ற ஜனங்களே சேர்க்கப்படுகின்றனர். நமது சொந்த இந்தியக் குடிகளின் வீரத்தன்மை அழிந்து வருகின்றது.

மத்திய ஆஷியாவில் ருஷியர் கைப்பற்றியிருக்கும் தேசங்களிலிருந்து அவர்கள் அல்கூஒப்,லோரிஸ் மெலிகாப்,போன்ற வீரர்களை உண்டாக்கியிருக்கிறார்கள். நாமோவெனில், நாயிக், ஹவில்தார், ரேஸில்தார், என்பதாக, பிரிடிஷ்ஜனங்கள்காதில் கேட்டிராத பெயர்கொண்ட ஏதேனுமோர் தாழ்ந்த வேலைக்கு வரக்கூடிய வீரர்களையே உண்டாக்கும்படியாக இருக்கிறோம். மோகல் சக்ரவர்த்திகள் முழுமனதுடனே "நம்பிக்கை" முறையையே முற்றிலும் அநுசரித்தனர். ஆக்பர் சக்ரவர்த்தியின் சிறந்த படைத்தலைவர்களும், மிக விசுவாசமுடைய துணைவர்களும், அவருடைய (ஆக்பருடைய)சொந்தப்

பாட்டனாரால் தோற்கடிக்கப்பட்டோர்களின் சந்ததியாரே. மோகல் சிங்காதனத்திற்கு முக்கியப் பாதுகாப்பு ரஜபுத்ர பராக்கிரமமாகவே யிருந்தது. ஆனால் பிரிடிஷ் கவரன் மெண்டோ "அவநம்பிக்கை" முறைமையை அனுசரித்திருக் கிறது. கீழ்வேலைகளி லிருந்து உயர்த்தப்பட்ட "கமிஷனில் லாத" கிழப்படைஞர்களே சுதேச சேனையில் உத்தியோகஸ் தர்கள். இவர்கள் நெடுங்காலம் உழைத்ததற்காகக் கொஞ்சம் பெரிய சம்பளம் பெறுவதுமன்றி ஓர் இங்கிலீஷ் ஸப்-ஆல்டர் னுக்கு முன்பு மட்டும் உட்கார அனுமதி பெறுகின்றார்கள். திருத்தத்தின் முதலடி யாதெனின் சுதேச ராணுவ உத்தியோ கஸ்தரின் அந்தஸ்தை அதிகரிக்கவேண்டும். அவர்களுடைய திறமைகளுக்கும் ஆசைகளுக்கும் இடங்கொடுக்க வேண்டும். கூலிக்குழைக்கும் சேனையை ஓர் தேசப்படையாக உயர்த்துவ தே இம்முறையின் முற்றுப்பாடாகும். மாகாணங்களுக்குச் சேனைகள் ஸ்தாபிக்கவேண்டும். அவர்களுக்கென்று பிரத்தி யேகமான தன்மையும் அனுசரணைகளும் ஏற்படவேண்டும்.

அவர்கள் ஸாமானிய ஜனங்களி லிருந்து பொறுக்கி யெடுக்கப்பட் டிருக்கவேண்டும். அவர்கள் எந்த மாகாணத்தில் வேலை செய்கிறார்களோ அந்த மாகாணத்தில் உயர்ந்த வகுப் புச் சனங்களே அப்படைகளில் உத்தியோகஸ்தராகவேண் டும். இங்ஙனம் செய்வதால் உள்நாட்டுக் குழப்பமில்லாம லிருப்பதுடன் வெளியிலிருந்து எவரும் படை யெடுத்து வாரமலிருப்பதற்கும் ஓர் ரக்ஷணையாகும். மோகல் சக்ரவர்த் திக்குக் கீழே ரஜபுத்ர சேனைகள் ரஜபுத்ரத் தலைவர்களுக் குள்ளும் முஸல்மான் சேனைகள் முஸல்மான் தலைவர்க ளுக் குள்ளுமாக இருந்துகொண்டு போட்டியின்பேரில் செய்த வீரச் செய்கைகள் எங்ஙனம் இன்றுவரை ஞாபக மிருக்கின்றனவோ அதுபோல எதிர்காலத்து மாகாணச் சேனைகள் தமக்குள்ளே போட்டிகொண்டு பொது நலத்திற்குச் சண்டை செய்வதில் சமத்துவமான வீரத்தன் மையும் வன்மையும் காட்டுவார்கள்.

ருஷியப் படையெழுச்சிப் பயம்.

ஏகாதிபத்திய ரக்ஷணையைப்பற்றிக் காமன்ஸ் சபையில் மிஸ்டர் பால்பர் (பிரதம மந்திரி) சமீபத்தில் செய்த பிரசங்கமானது பெரு நன்மைக்குக் காரணமாக இருக்கின்றது. ஆங்கிலோ இந்திய ராணுவ சரித்திரத்தில் அது ஓர் புதுப் பருவத்தைக் குறிப்பிடுகின்றது. சென்ற பல கவர்ன்மெண்டுகளுக்குத் தொடர்ச்சியாக அச்சமளித்து வந்த ருஷியப்படையெடுப்பு இப்போது முற்றிலும் அசாத்தியமாகி விட்டதென்று ரக்ஷணைக்கமிட்டியாரகூட அபிப்பிராயப்படும் அளவிற்கு வந்துவிட்டது. ருஷியப் படையெழுச்சிப் பயம் ஓர் விநோதப் பிரமையெனலாம். இது அநேகமாய்ச் சென்ற ஒரு நூற்றாண்டாக இடைவிடாமல் இருந்துவருகின்றது. இப்பொழுது நாம் மஞ்சூரியாவில் ருஷியப் படைகளின் அழிவைப்பார்த்ததின் பிறகுங்கூட இந்தப்பயம் முற்றிலுந் தூரத்தப்பட்டபாடில்லை. ஆனால் மிஸ்டர் பால்பரின் பிரசங்கம் உண்மையைச் சரியானபடி விளக்குவதில் மிகப் பயன்பட்டிருக்கின்றது. உண்மை யாதெனில், ஸாரின் நிலத்திற்கும் பிரிடிஷாரின் இந்திய ராஜ்ஜியத்திற்கு மிடையே இயற்கையாக ஏற்பட்டிருக்கும் தடைகள் கடத்தற் கரியன. இந்தியாவின் மீது ருஷியா படையெடுக்குமாயின் அதுவே ருஷியாவுக்கு நாச காரணமாகும். எதுபோலவெனில், இங்கிலண்டு மத்திய ருஷியாவின்மீது படையெடுக்குமாயின், சிறிதேனும் ஐயமின்றி அங்கனுப்பப்படும் படை நாசமடைந்து விடுவதுபோல. மிஸ்டர் பால்பர் இதை ஒத்துக்கொள்ளும்படி அத்தனை தூரம் வந்துவிடவில்லை. ஆனால் இந்தியாமீது படையெடுத்தல் ருஷிய கவர்ன்மெண்டின் ஆலோசனைகளி லொன்றில்லையென்றும், இந்தியாவின் மீது திடீரென்று நாம் பாராமுகமாயிருக்கும்போது படை கொணர்ந்து விடுதல் சாத்தியமில்லையென்றும், இந்தியாவைப் படையெடுத்துப் பிடுங்கிக்கொள்ள முடியாதென்றும், மிஸ்டர் பால்பர் எடுத்துக்கூறியிருக்கிறார். இடமாற்றலும், சாமான் கொண்டுவருதலும் இருப்புப்பாதை

களில்லாவிடின் அசாத்தியம். ஆப்கானிஸ்தான் மூலமாக இருப்புப்பாதை போடுதல் எத்தனையோ வருஷங்களின் வேலை. "ஆப்கானியர் தமது கணவாய்களில் இந்த இருப்புப்பாதைகள் போடுவதை விருப்புடன் பார்த்திருக்க மாட்டார்கள்" என்று (மிஸ்டர் பால்பர்) ஞாபகப்படுத்தியது மற்றொரு ஞாபகிக்க விஷயமாகும்.

ருஷிய யுத்த தந்திர சம்பந்தமான இருப்புப் பாதைகளிலே ஆப்கானிஸ்தானத்தின் வழியாக ஓர் இருப்புப் பாதை போட முயற்சி செய்யப்படுமாயின், அதனை நேரே இங்கிலண்டுக்கு விரோதச் செய்கையாகவே கருதவேண்டுமென்பதில் முற்பட்சைக் கட்சிக்கு மாறுபட்டவர்கள் கூட ஆக்ஷேபம் கூறமாட்டார்கள். "ஆப்கானிஸ்தானத்தில் இருப்புப்பாதைகள் யுத்தகாலத்திலேதான் போடப்படும்" என்று மிஸ்டர் பால்பர் கூறுவதில் விரைந்தனர். இந்த விஷயம் தர்க்கத்திற்குட்படக் கூடியதல்லவாயினும், இங்கிலண்டும் இருப்புப்பாதை போட்டுத் தொந்தரை செய்யாதிருத்தலே பொருந்துமென்பது இதினின்றும் ஏற்படுகிறது. இந்த முறைமையை இந்தியா ஜனங்களைக்காட்டிலும் அதிகப் பரிவுடன் எவரும் அங்கீகரிக்கமாட்டார்கள். இம்முறை எப்போதும் மறுக்கப்படாமலிருக்க வேண்டுமென்று அவர்களைப் போல் அத்தனை ஆவலுடன் எவரும் பிரார்த்தனை புரியமாட்டார்கள். இப்போது (இங்கிலண்டு) ஜனங்கள் கண்ணில் பிரமாதமாகத் தோன்றும் விஷயமாகிய லார்டு கிச்சனருக்கும், லார்டு கர்ஸனது ராணுவ மந்திரிகளுக்கு மிடையே நடந்து வரும் விவாதம் இந்தியர்கள் மனதில் எவ்வித கலக்கமும் உண்டாகவில்லை. இந்த விவாத விஷயத்தில் இந்தியர்கள் இருபகுதியாரையும் சபித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், எந்த கட்சியாரின் அபிப்பிராயம் ஊர்ஜிதம் பெற்ற போதிலும், ஆள்வோர் தர்க்கமட்டிலுஞ் செய்துக்கொண்டிருக்க இந்தியர்கள் கைப்பணம் இறுக்கும்படி நேர்கின்றது. ராணுவ இயல்புடையதும் பிற நாடுகளைத் தாக்கும் எண்ண

முடையதுமான அரசியலைத்தான் அவர்கள் முற்றிலும் கண்டிக்கிறார்கள். டிபெட்டிலும், பெலுசிஸ்தானத்திலும், பாரஸீகக் கடலுக்கப்பாலும் பொதுவாக எல்லைக் கப்பாலும் பாண வித்தைகள் நடத்தி ராணுவச்செலவை மிகுதிப்படுத்துவதுதான் அவர்கள் கூடாதென்கிறார்கள். ருஷியாவில் ஏகாதிபத்திய முறைமையை பிரதம மந்திரி கண்டித்துப் பேசியதுபற்றி இந்தியர்கள் ஆனந்தமடைவார்கள். அவர் அவ்விஷயத்தைப்பற்றிப் பிரிடிஷா ரனுகூலத்தைக் கருதியே பேசின தென்பது மெய்தான். ஆனால் அவர் சொல்லியிருக்கும் முடிவை அனுசரிப்பதினால் இந்தியாவின் செலவிலும் வரிப்பளுவிலும் முக்கியப்பயன் விளைவது திண்ணம். சென்ற 25-வருஷங்களாக பெரும் பணம் தண்ணீர் போலக் கொட்டப்படுகின்ற வடமேற்கெல்லைச் செலவு குறைபட்டுப்போவது திண்ணம். எல்லையை அதிகப்படுத்த வேண்டுமென்ற முறை அணியடித்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. அம்முறையினால் ஏற்பட்டிருக்கும் பொருட்சேதத்தையும் துன்பத்தையும் இந்தியாவில் அமைதி, செலவுக்குறை, சீர்திருத்த மென்பவற்றில் விருப்பமுடைய எல்லோரும் நினைவிற் கொண்டிருப்பார்கள்.

இந்தியா விஷயத்தில் இங்கிலண்டின் நடைமுறை.

இந்தியா விஷயத்தில் ஆங்கிலேயர் நடை முறையைப் பற்றிச் சில கூறி இவ்வியாசத்தை முடிக்கின்றேன். இந்தியாவின் ராஜ்ஜியக்காரியங்களில் ஆங்கிலேயர் சிரத்தைகொண்டொழுகுவதில்லை பொதுவாக எல்லோரும் குறைகூறுகின்றனர். ஓர் பெரிய பஞ்சம் அல்லது ஒரு பெரிய தர்பார், ஓர் பெரிய பூகம்பம், அல்லது ஓர் பயங்கரமான கொள்ளை நோய் போன்றவைகள் நிகழும்போதன்றி நாம் நமதுபிரமாண்டமான சார்புத் தேசத்தைப்பற்றிக் கருதுவதேயில்லை.-

ஒரு வேளை அங்ஙனமிருத்தல் தவிர்க்கமுடியாதது போலும். ஆனால் இங்கிலண்டின் ஏகாதிபத்தியம் இந்தியா வே. அதற்கு முன் நமது பெருங்குடியேற்ற நாடுகள் அற்பமாய்விடுகின்றன. இந்தியா விஷயத்தில் நமக்கு நிகரற்ற பொறுப்புகளிருக்கின்றன. நமது செய்கைகள் நெடுந்தூரம் பரவிப் பெரும் பயன் விளைக்கத்தக்கனவாகும். இந்தியாவின் விதி பொறுத்து நிற்பதாகிய பெரு விஷயங்கள் கடைசியாக ஆங்கிலேயரால்தான் முடிவு செய்யப்படவேண்டும். அவர்கள் முற்பாட்டிற்கு துணைபுரிந்து அதனை நிச்சயப்படுத்திவிடவும் அரசுமுறைமை நிர்மாணிக்கவும் நமக்குரிமையுள்ளது. குறித்த சிலவிஷயங்களில் ஆங்கிலேயர் கவனஞ்செலுத்துவதனால் லாபமுண்டாகு மென்பதை நான் மறக்கவில்லை. ஆனால் பொதுநீதிகளில் கவனஞ்செலுத்துவது அதிக முக்கியமாகும். நான் வேண்டு மென்றே இப்பத்திரிகையில் பொதுநீதிகளை மட்டிலும் பற்றி விவகரித்திருக்கின்றேன். கூடியவரை சில்லரை விவரங்களைத் தவிர்த்திருக்கிறேன். ஏனெனில் இப் பத்திரிகை எவர் பொருட்டு எழுதப்பட்டுளதோ அவர்களுக்குச் சில்லரை விவரங்களை விரித்துரைத்தல் பொருந்தாது.

புதுப் பார்லிமெண்ட் ஏற்படும்போது அதில் இந்தியா விஷயங்களைப்பற்றிப் பார்லிமெண்ட் விசாரணை யேற்படுத்த வேண்டுமென்பது போன்ற விவகாரங்கள் கொண்டுவரப்படும். முன்காலத்தில் பழைய ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் உரிமைப் பத்திரத்தை இருபது வருஷத்துக் கொருமுறை புதுப்பித்த போதெல்லாம் விசாரணை நடந்ததுபோல இப்போதும் நடத்தவேண்டும். இவ்விசாரணைகள் தேசாபிவிருத்தியின் முக்கியப் பருவங்களைக் குறிப்பிட்டன. புதுப்பார்லிமெண்ட் ஏற்படும்போது இந்தியா செக்ரிடேரியின் சம்பளத்தையும் பிரிடிஷ் மதிப்பீட்டிற் சேர்க்கவேண்டுமென்ற பிரேரேபணை கொண்டுவரவேண்டும். இந்த அவசியமான சீர்திருத்தத்தினால் விவாதம் எளிதாவது மன்றிப்பொறுப்பு ஏற்பட்டுவிடும். பார்லிமெண்டின் முறைகொண்டு கவனிக்கப்படும்

விஷயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. பார்லிமெண்டில் இந்திய விஷயங்களைப்பற்றித் தக்க ஞானமுடையவர்களும், இந்திய ஜனங்களின் கஷ்டங்களிலும் அவாக்களிலும் மனப்பூர்வமான அனுதாபமுடையவர்களுமாகிய ஜனங்கள் பிரதிநிதிகளாக வருங் காலத்தை எதிர் பார்த்திருக்கின்றேன். பார்லிமெண்டில் எப்போதும் இந்தியா விஷயங்களைப் பற்றியே அழுத்திக் கேட்டுக்கொண்டிருக்க மன நிசைந்திருக்கும் ஆனரபில் மெம்பர்களுக்கு இந்தியா நன்றியாற் கட்டுண்டிருக்கின்றது. ஆனால் தற்காலத்துப் பார்லிமெண்டில் இங்ஙனம் அறிவும் அனுதாபமுஞ் சேர்ந்த மெம்பர்களின் தொகை நாலைந்துக்கு மேற்படாதென்று நான்கூறுதல் அவசியமின்று. இந்தியாவிற்காக இன்னும் அதிக மெம்பர்கள் வேண்டும். பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றி அதிகப் பிரஸ்தாபம் நடக்கவேண்டும். பிரிடிஷ் ராஜாங்கத்தில் இந்தியா மிகவும் முக்கியமான தனிப்பாக மொன்றாகையாலும், ஏகாதிபத்தியத்தில் நேரே பிரதிநிதி யனுப்பாத பாகமாயிருப்பதால் விசேஷகவனத்துக்குரிய தாகையாலும், இந்தியாவுக்கென்றே உழைப்பதற்குப் பல மெம்பர்கள் வேண்டும். ஆனால் புதுப்பார்லிமெண்ட் மெம்பர்கள் இந்திய ஆட்சியின் சில்லரை விவரங்களில் தமது முயற்சிகளைச் செலவிடல் பயன்படமாட்டாது. பார்லிமெண்டுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் உள்ள சம்பந்தங்களைப்பற்றிக் காமன்ஸ் சபையில் மிஸ்டர் கிளாட்ஸ்டன் பேசியபோது அவர் கூறிய வார்த்தைகள் எனக்கு ஞாபகமிருக்கின்றன. அவர் சொன்னார்:—

"இந்தியா கவர்ன்மெண்டார் என்ன மூலமாக வேலைகள் செய்யவேண்டுமென்று விவரங்களைப் போதிப்பது நமது கடமையன்று. ஆனால் இந்தியாவில் மகாராணியின் பிரதிநிதியாக இருப்போர்களிடம், பொதுவாகச் சிறந்த ஆட்சி நீதிகளென இன்னின்னவற்றை நாம் நம்புகிறோமென்று அவர்களுக்குத் தெரிவித்தல் நமது கடமையே. இந்நீதிகளை இந்தியாவிலிருக்கும் அதிகாரிகள் நிறைவேற்றத் தவறிவிட்

டார்களென்று தெரியும்போது அதைப்பற்றிப் பேசவேண்டியது இச்சபையின் கடமையும் தொழிலுமாகும். ஆனால் அவர்களுடைய உயர்ந்த ஆட்சித் தொழில்களிலும் அவர்கள் வழிதேடிக்கொள்வதிலும் அவர்கள் யுக்தப்படியே விட்டுவிடவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.''

இவ்வார்த்தைகள் அறிவு முதிர்ந்தனவாகும். இந்தியாவின் நல்லாட்சியில் பார்லிமெண்டுக்கு யாதொரு பொறுப்புமில்லையென அச்சொற்கள் உணர்த்தவில்லை. இந்திய உத்தியோகஸ்தர்கள் இந்தியாவில் பார்லிமெண்ட் தலையிடாமல் தவிர்த்துவிடவேண்டுமென்ற இகழ்ச்சிக்குரிய முறையீட்டுடன் இது இணங்கவில்லை. ஆனால் பார்லிமெண்ட் நேராக தனது அதிகாரத்தை இந்தியாவின் மீது செலுத்தலில்லையென்றும், ஆட்சியின் சில்லரை விவரங்கள் ஸ்தல அதிகாரிகளின் வசமே ஒப்புவிக்கப்படவேண்டுமென்றும், அவ்வதிகாரிகளுக்கு வழிகாட்டும் பொருட்டு விதிக்கப்பட்டிருக்கும் பொது நீதிகளை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு அவர்களைச் சேர்ந்ததே யென்றும் (மிஸ்டர் கிளாட்ஸனுடைய) இச்சொற்கள் தக்க சமயத்தில் நினைப்பூட்டின. அவர்கள் செய்யவேண்டிய நல்லதும் பெருமைதங்கியதுமான வேலை எத்தனையோ இருக்கின்றது. தற்காலத்திருக்கும் மாறுபாட்டுப் பருவத்திற்குரிய கஷ்டங்களானவை ஸ்தல அதிகாரிகள் அன்புடன் ஒத்துழைத்தாலொழிய நீங்கமாட்டா. அவர்கள் ஸ்தான உயர்வினால் அவர்களுடைய சுய சக்தி சொல்லக்கூடாதபடி மிகுதியுற்றிருக்கின்றது. அதனைச் செலுத்துவதாலும், க்ஷமை, மரியாதை, நல்லெண்ணம் என்பவற்றை யுணர்த்தும் சிறந்த முன் மாதிரிகளாலும் அவர்கள் உன்னதத்தையும் கர்வத்தையும் மிகவும் சாந்தப்படுத்திக் கொள்ளவும் இந்திய ஜனங்களுடன் அதிக நட்பு ஸ்தாபனம் செய்துகொள்ளவும் வல்லோராவர். இங்கிலாந்து ஜனங்களின் கடமைகளோ வேறுவகைப்பட்டன. நமது சொந்ததேசத்தின் காரியங்களில் சுறுசுறுப்பாக இருக்கும் நாம் இந்திய

[illegible]



சாகுந்தள நாடகம்.

திருவல்லிக்கேணி

வெஸ்லியன் மிஷன் பாடசாலையில்

தமிழ்ப் போதகராகிய

[illegible] ஸ்வாமிநாத சாஸ்திரிகளால்

[illegible]

[illegible]

[illegible]

[illegible] [illegible]

[illegible] நாடகம்.

[illegible]

[illegible]

[illegible]

N. [illegible] ஸ்வாமிநாத சாஸ்திரிகளால்

[illegible]

[illegible]

[illegible]

விலை அணா 12. [illegible]

[illegible],

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை.

The


Swadesamitran Press

Undertakes Printing of all Descriptions

IN

ENGLISH AND TAMIL

(Business Programmes, Commercial, Official, Legal, Private, Educational, Fancy and Artistic. Every description of Job work Book work).



Note.—Colour and Label Printing—A Speciality.

Estimates on Application.

Moderate Charges,

Trial order solicited.

The Swadesamitran Press,

117, Armenian Street,

Madras.